# LAABH SAMACHAR

Volume: 10 Issue : 12 **MARCH 2022** Tamil & English Monthly Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE

அவோ! மிளோ!! ஹொடோ!!!

**SITCON**

SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE

**2022**

**Conference & Exhibition**

Conference @ **V.S. Chellam Century Hall A/C** - Date: 6 & 7.08.2022

Exhibition @ **V.S. Chellam Saraswathy Hall A/C** - Date: 5, 6 & 7.08.2022

To



**Program on GST & IT (Implements & Amendments)**



**Robotic Surgery (Worldclass treatment at your Door Step)**



**A Special meet on ADVANCE TAX**




SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

# சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536



அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

METRO



# மெட்ரோ ஷூ மார்ட்

16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.
PH : 23322364, 2331297, 4382343



TEXMO®
Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP
Authorised Dealer:
## Madurai Pipe
76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 2621523
B.O.: 32-A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014.

AQUATEX®
Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems


Borewell Submersibles


Single Phase Jet Pumps


Pressure Boosting Systems


Electric Motors


Single Phase Domestic Pumps


Agricultural Monoblocks


Open-well Submersibles

# பர்வதா டிரேடர்ஸ்

செல்: 94439 30728

Manufacturer: PP Woven Bags
Size: 26/41, 28/46, 38/46, 40/42, 45/50, 50/55, 55/66
(All sizes available)
*Used second hand Woven bags also available



37, கிருஷ்ணாபுரம் காலனி 3வது தெரு, மதுரை - 625014

**உங்கள் உடல் எடையை பராமரிக்க குறைக்க / அதிகரிக்க விரும்புகிறீர்களா?**


- உங்கள் விருப்பமான உணவை தவிர்க்காமல்.
- கடின உடற்பயிற்சி இல்லாமல்.
- பாதுகாப்பு மற்றும் அதிக பயன்.
- உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சரியான எடையில் ஆரோக்கியமாக இருக்க

ஆலோசனை பெற அணுகவும்

**L.N.R. தாமோதரன் - 98431 71477**

## SCC BOARD OF MEMBERS 2019-2021

| | | |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| **Past Presidents** | | |
| K.V. Bala | Senior President | 044 2833 0867 |
| C.K. Sekar | Past President | 97900 77111 |
| E.R. Kumaresan | Past President | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Past President | 98409 60845 |
| S.K.R. Ramesh | Past President | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Imm. Pt. President | 99944 84443 |
| **Office Bearers & EC Members** | | |
| Kumaran B. Jaghuva | President | 99949 26348 |
| T.R. Mohanram | Vice President | 93441 01432 |
| K.K. Dinesh | General Secretary | 98421 16461 |
| V.G. Ramdoss | Overseas Secretary | 93441 00360 |
| T.K.D. Mohan | Treasurer | 98430 52530 |
| K.K. Kubendran | Joint Secretary | 98940 37794 |
| J.S. Sayee Jeevan | Joint Secretary | 90809 51577 |
| S.G. Srinivasan | EC Member | 91500 99456 |
| T.N. Suriyaprakash | EC Member | 93441 52068 |
| A.B. Kumaresh Babu | EC Member | 93443 04980 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| G.R. Subramanian | EC Member | 94427 52044 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| V.V. Ramlakshmanji | EC Member | 94439 30728 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| T.R. Saravanan | EC Member | 92446 84702 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.G. Narayanan | | 93441 03745 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| **Editorial Board** | | |
| B.S. Janaarthanan | Chairman | 97905 75650 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| S.S. Ramsunder | Member | 93441 22181 |
| T.G. Surajlal | Member | 98436 20908 |
| N.R.R. Gopi | Member | 98431 70264 |
| **PRO** | | |
| S.K.B. Chandraprakash | Chairman | 98655 45048 |
| **Patron Members** | | |
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals | |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai | |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu | |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut | |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles | |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia | |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., | |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering | |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos | |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond | |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors | |
| T.E. Yogesh | M/s. The Constructive Company | |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai | |

# தலைவர் அறிக்கை

*அஸ்கிதெஃகோ மொன்னு பொரெ*

## நமஸ்கார்...

நிகழும் 2022ம் ஆண்டு, சிட்கான் மாநாடு நடத்த நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் திட்டமிட்டுள்ளது. அதன்படி, வருகின்ற ஆகஸ்ட் மாதம் 5, 6 மற்றும் 7, (வெள்ளி, சனி மற்றும் ஞாயிறு) ஆகிய மூன்று தினங்கள் மதுரை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள V.S. செல்லம் சரஸ்வதி மற்றும் சென்சூரி அரங்கில் நடைபெற இருக்கிறது. நமது சேம்பர் துணைத் தலைவர் திரு. T.R. மோகன்ராம் அவர்கள் இந்த மாநாட்டிற்கு தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். விரைவில் மாநாட்டின் பிரவுச்சர் வெளியிடப்படும். அங்கத்தினர்கள் அனைவரும் பேராதரவு தந்து மாநாட்டை வெற்றி பெறச் செய்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், சமூக பொதுப்பணிக்காக CSR (Corporate Social Responsibility) –ல் பதிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டின் முதுகெழும்பாக இருக்கும் தொழில் துறையினர்கள் அனைவருக்கும் புதிய நிதி ஆண்டு 2022-23 வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். வரும் நிதி ஆண்டில், நம் சங்க அங்கத்தினர்கள் தங்களது தொழிலில் நல்ல லாபமும், தொழில் மேன்மையும் அடைய வேண்டி இறைவனை பிரார்த்திக்கிறேன்.

நன்றி

– குமரன் B ஜகுவா

## திருக்குறள்

**நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்**
**அல்லற் படுப்பதூஉம் இல்.**

**பொருள்:** மனிதருக்கு நல்ல சகவாசத்தைவிட நன்மை செய்யக்கூடிய துணையும் இல்லை; கெட்ட சகவசாமாகிய சிற்றினச் சேர்க்கையைவிடத் துன்பம் உண்டாக்கக்கூடிய பகையும் இல்லை.

**அதிகாரம் 46** | **சிற்றினம் சேராமை** | **அரசியல்**

(அறிவு ஒழுக்கத்தில் குறைந்தவருடன் சேராமை)

**Sourashtra Chamber of Commerce**
**Bank Details:**
State Bank of India
City Branch
A/c No: 30134805614
IFSC No: SBIN 0000988

Kindly Save our **Whatsapp** No:
To get our Correspondence, Business News / Information, Govt. Notifictions, Amendments, New Technology etc.,
**93441 97952**

# பொதுச்செயலாளர் அறிக்கை

அங்கத்தினர்களுக்கு வணக்கம்

**21.02.2022** – தொழில் குறித்த தகவல்களுடன், சமூக சேவைகளையும் செய்து வருகிறது நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ். இதனை மேலும் விரிவு செய்ய, பெரு நிறுவனங்கள், சமூக பொறுப்புகளுக்காக ஒதுக்கீடு செய்யும் CSR (Corporate Social Responsibility) தொகையைப் பெற்று செயல்படுத்துவதற்காக நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் இதில் பதிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறது.

**26.02.2022** – ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் **10வது செயற்குழு கூட்டம்** மாலை 6 மணி அளவில் நடைபெற்றது. இதில் சேம்பர் முன்னாள் தலைவர்கள், நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் **சிட்கான்** மாநாடு வரும் ஆகஸ்ட் மாதம் 5,6 மற்றும் 7 ஆகிய நாட்களில் V.S. செல்லம் சரஸ்வதி மற்றும் சென்சூரி அரங்கில் நடைபெரும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதோடு, சேம்பர் துணைத்தலைவர்திரு. T.R. **மோகன்ராம்** அவர்களின் தலைமையில் இந்த மாநாடு நடைபெரும் என்று அறிவிக்கப்பட்டது.

**05.03.2022** – New Implements & Amendments on GST & Income Tax என்ற தலைப்பில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சி, நமது **ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்** மற்றும் Indian Institute of Public Administration (IIPA) இணைந்து நடத்தியது. இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினர்களாக, **CA. G. சரவணக் குமார்** மற்றும் **CA. J. பால சுப்பிரமணியன்** Partners, B.S.L.S. Associates, Madurai ஆகியோர் கலந்துகொண்டு விளக்கமளித்தார்கள். சேம்பர் துணைத் தலைவர் திரு. **T.R. மோகன்ராம்** அவர்கள் இந்தக் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். IIPA சேர்மன் திரு. **S. ராஜகோபால்** அவர்கள் உரை ஆற்றினார். முன்னாள் தலைவர் திரு. ... பிரபாகரன் அவர்கள் நிகழ்ச்சி நடத்த ஆலோசனை வழங்கி விருந்து ஏற்பாடும் செய்தார். இந்த நிகழ்ச்சியை சேம்பர்-ன் நிகழ்ச்சிக் குழு சேர்மன் திரு. **T.R. சரவணன்** அவர்கள் ஏற்பாடு செய்தார்.

**11.03.2022** – Advance Tax என்ற தலைப்பிலான சிறப்புக் கூட்டம் நமது சேம்பர் அரங்கில் மாலை 6 அளவில் நடைபெற்றது.

நன்றி

– K.K. தினேஷ்

# இதழ்குழுத் தலைவர் அறிக்கை

அங்கத்தினர்களுக்கு வணக்கம்

கடந்த மாதம், உள்ளாட்சி தேர்தலில், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நமது சமூகத்தவர்கள் வேட்பாளராக போட்யிட்டு பலர் வெற்றிபெற்றுள்ளனர். அவர்களை நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

சிட்கான் மாநாடு நடைபெறும் நாள் மற்றும் இடம் இந்த இதழில் அறிவிக்கப்பட்டுள்ளது. மாநாட்டின் ஸ்டால் மற்றும் மலர் பணிகள் முதற்கட்டமாக நடைபெறுகின்றன. முன்னதாக, மாநாட்டின் பிரவுச்சர் வெளியீடு செய்ய இருக்கிறோம். அதில், மலர் மற்றும் ஸ்டால் குறித்த தகவல்கள் அறிவிக்கப்படும். சேம்பர் அங்கத்தினர்கள் மற்றும் பொது மக்கள் தங்களின் ஏகோபித்த ஆதரவைத் தந்து மாநாட்டை வெற்றிபெறச் செய்ய விரும்புகிறேன்.

நமது லாப் ஸமாச்சார் மாத இதழ், பல்சுவை தகவல்களுடன் வெளியாகியுள்ளது. அனைவரும் தங்களின் கருத்துக்களை தெரிவிக்கக் கேட்டுக்கொள்றேன்

நன்றி - B.S. ஜெனார்த்தனன்


**Statement about Ownership and other particulars of LAABH SAMACHAR, (Monthly) Madurai as required under rule 8 of the Registration of Newspapers(central) Rules, 1956 Form IV (See Rule 8)**

| | | |
|---|---|---|
| Place of Publication | - | Madurai |
| Periodicity of its Puclication | - | Monthly |
| Printer's Name | - | K.R. Ramalingam |
| Nationality | - | Indian |
| Address | - | No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 1, Tamilnadu. |
| Publisher's Name | - | K.K. Gnana Prabhakaran |
| Nationality | - | Indian |
| Address | - | 5A, Pankajam Colony 3rd Cross Street, Madurai Tamilnadu. |
| Name and Address of Publication of own the newspaper & Partners or share holders holding more than one percent of the total capital. | - | Sourashtra Chamber of Commerce, 136, East Veli Street, II Floor, Madurai - 1. Tamilnadu. |

I, K.K. Gnana Prabhakaran, hereby declare that the particulars give above are true to the best of my knowledge and belief.

Date: 01.03.2022 K.K. Gnana Prabhakaran

https://www.youtube.com/watch?v=CF5XqdbDLsk



https://www.youtube.com/watch?v=eVZUdTwLqlQ&t=149s





# New Implements & Amendments on GST & IT

மத்திய அரசு ஜி.எஸ்.டி-யில் அடுத்தடுத்து பல்வேறு புதிய மாற்றங்களைக் கொண்டு வந்துகொண்டே உள்ளது. அதில் சமீப காலங்களில் முக்கியமாக மாற்றி அமைத்துள்ள வரி விபரங்களை அறிந்துகொள்வதற்காக விளக்கக் கூட்டம், கடந்த **05.03.2022** அன்று மாலை 6 மணி அளவில் சேம்பர் அலுவலகத்தில் நடைபெற்றது.

**New Implements & Amendments on GST & Income Tax** என்ற தலைப்பிலான இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினர்களாக, **CA. G. சரவணக் குமார்** மற்றும் **CA. J. பால சுப்பிரமணியன்** Partners, B.S.L.S. Associates, Madurai ஆகியோர் கலந்துகொண்டு விளக்கமளித்தார்கள்.

இந்த நிகழ்ச்சி, நமது **ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்** மற்றும் **Indian Institute of Public Administration (IIPA)** இணைந்து நடத்தியது. IIPA நிர்வாகிகளும் இதில் கலந்து கொண்டனர். சேம்பர் துணைத் தலைவர் திரு. **T.R. மோகன்ராம்** அவர்கள் இந்தக் கூட்டத்திற்கு தலைமைத் தாங்கினார். IIPA சேர்மன் திரு. **S. ராஜகோபால்** அவர்கள் உரையாற்றினார். சேம்பர் முன்னாள் தலைவரும், IIPA அமைப்பின் இணைச் சேர்மனுமான திரு. **K.K.G. பிரபாகரன்** அவர்கள் சேம்பர் மற்றும் IIPA ஆகிய இரண்டு அமைப்புகளின் வளர்ச்சி மற்றும் செயல்பாடுகள் குறித்துப் பேசினார்.

சிறப்பு விருந்தினர்களின் விளக்கவுரைக்கு முன்னதாக, சேம்பர் நிர்வாகிகள், IIPA நிர்வாகிகளையும், IIPA, சேம்பர் நிர்வாகிகளையும் பொன்னாடை அணிவித்து பரஸ்பரம் கௌரவித்தனர். இரண்டு அமைப்புகளும் இணைந்து சிறப்பு விருந்தினர்கள் இருவரையும் நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தனர். இந்த நிகழ்ச்சியை சேம்பர்-ன் நிகழ்ச்சிக் குழு சேர்மன் திரு. **T.R. சரவணன்** அவர்கள் ஏற்பாடு செய்தார்.

இரண்டு சிறப்பு விருந்தினர்களில், **CA. G. சரவணக்குமார்** அவர்கள் வருமான வரி குறித்தும், **CA. J.** பால சுப்பிரமணியன் அவர்கள் ஜி.எஸ்.டி வரி குறித்தும் விளக்கமளித்தனர்.

**வருமான வரி குறித்து - CA. G. சரவணக் குமார்:**

தனிநபர் மற்றும் சிறு வியாபாரிகள் தாக்கல் செய்யும் ஆண்டு வருவாய்க்கான வருமான வரி தாக்கலில், புதிதாக Updated Return, திருத்தப்பட்ட வருமான வரித் தாக்கல் எனும் புதிய முறையை கொண்டு வந்துள்ளனர். கூடுதல் வருமானத்தை காண்பிப்பதற்காக இந்த முறையைக் கொண்டு வந்துள்ளதாகத் தெரிவித்தார்.



வியாபாரிகள், தொழிலுக்காக செய்யும் செலவுகளை தவிர்த்து வரும் லாபத்தைக்கொண்டு வரியைச் செலுத்துவர். அதில் தற்போது Sec. 37 எனும் புதிய பிரிவைக் கொண்டுவந்துள்ளது. கொரோனாவினால் பொருளாதார சூழலை எதிர்கொள்ள ஒருவரிடமிருந்து பெறப்பட்ட தொகைக்கு வருமான வரி விலக்கு அளிக்கப்படுகிறது எனத் தெரிவித்தார். இது தவிர, கிரிப்டோ கரன்சி, பரிசின் மூலமாக வரும் வருமானம், Annual Information Statement போன்றவற்றில் வரி விதிப்பு முறையில் கொண்டு வரப்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் புதிய அறிவிப்புகள் குறித்துப் பேசினார்.

மேற்படி தகவல்களுடன், ஜி.எஸ்.டி யில், புதிதாக கொண்டு வரப்பட்டுள்ள ரெக்கவரி புரொவிசன் Recovery Provision, தாக்கல் படிவ விதி முறைகள் போன்ற சில தகவல்களை வழங்கி தனது உரையை நிறைவு செய்தார்.

**ஜி.எஸ்.டி குறித்து - CA. J. பாலசுப்பிரமணியன்:**

பேசிய போது, ஜி.எஸ்.டி. சட்டத்தில் மத்திய அரசு, ITC-யில் ஒரு புதிய திருத்தத்தைக் கொண்டுவந்துள்ளது. அதன்படி,

PANDIAN
PERFORMANCE CHEMICALS

# PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098

Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care




PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

- ALPHA OLEPHIN SULPHONATES
- SODIUM LAURYL ETHER SULPHATES
- SODIUM LAURYL SULPHATES
- CETOSTEARYL ALCOHOLS
- FATTY ALCOHOLS
- OLEO CHEMICALS
- POLYMERS
- PERFORMANCE CHEMICALS &
- FRAGRANCES

Dealers in

Godrej
Godrej Industries Limited

IFF
International Flavours & Fragrace Pvt. Ltd.



K K Dinakaran

www.pandiansurfactants.com / www.pandianfragrances.com

Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831

https://www.youtube.com/watch?v=D9eLFp7ZBlA





வியாபாரம் செய்பவர்கள், ITC எடுப்பதற்கு முன்னாள், 2B படிவத்தில் காண்பிக்கப்பட்டிருந்தால் மட்டும் ITC எடுக்கக் கேட்டுக்கொண்டார். இ-வே பில் பொருத்த வரையில், இ-வே பில் எடுப்பதற்கு, வரையருக்கப்பட்ட மதிப்பிற்குண்டான ஒரு சரக்கை மற்றொரு இடத்திற்கு அனுப்புகையில், இ-வே பில் கட்டாயம் எடுக்க வேண்டும். எடுக்கத் தவறும் பட்சத்தில், சரக்கின் வரித் தொகையில் 200 சதவீதம் அபராதமாக செலுத்த வேண்டும். மேற்படி இரண்டு புதிய திருத்தங்களும் 01.01.2022 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது என்று தெரிவித்தார்.

அதோடு, ஜி.எஸ்.டி., துறையிலிருந்து எந்த ஒரு நோட்டீசும் கிடைக்கப்பெற்றால், அதற்கு உடனே அதிகாரிகளை தொடர்புகொண்டு தீர்வு காண வேண்டும். தவறும் பட்சத்தில் கடுமையான நடவடிக்கைகளுக்கு ஆளாக நேரிடும். அந்த அளவிற்கு ஜி.எஸ்.டி. கடுமையான திருத்தங்களுடன் நாளுக்கு நாள் வருவதாகத் தெரிவித்தார். புதிதாக ஜி.எஸ்.டி எடுப்பவர்கள், ஆதார் தற்போது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்று கூறினார். GSTR1, 3B ஆகியவைகளில் காட்டப்படும் தொகை சரியாக இல்லாத பட்சத்தில் உடனே அதிகாரியைத் தொடர்புகொள்ள வேண்டும் என்று கூறினார்.

நிறைவாக, புதிதாக தொழில் தொடங்கும்போது, வங்கிக் கணக்கு மற்றும் ஜி.எஸ்.டி பதிவு பெரும்போது, வங்கி கணக்கு துவங்கும்போது ஜி.எஸ்.டி பதிவும், ஜி.எஸ்.டி பதிவு பெரும்போது வங்கிக் கணக்கும் கேட்கப்படும். இதில் எதை முதலில் எடுத்து அளிப்பது என்ற குழப்பத்திற்கு, ஜி.எஸ்.டி. வரி ஆணையம் இதற்கு தீர்வாக, முதலில் ஜி.எஸ்.டி பதிவு பெற்றபின், அடுத்த 45 நாட்களுக்குள் வங்கிக்கணக்கை இணைக்க வேண்டும் என்று புதிய திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளது என்று கூறினார்.

இருவரின் உரைக்குப் பிறகு கலந்து கொண்ட உறுப்பினர்களின் கேள்விகளுக்கு விடையளித்தார். இறுதியாக, IIPA அமைப்பின் பொருளாளர் திரு. **கோவிந்தராஜன்** அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது. இந்த கூட்டத்திற்கு வருகை தந்த அனைவருக்கும், அறுசுவை இரவு உணவு விருந்து சேம்பர் முன்னாள் தலைவர் திரு. K.K.G. **பிரபாகரன்** அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

**Indian Institute of Public Administration** ஒரு தேசிய அமைப்பாகும். இவ்வமைப்பானது, பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்களால் உருவாக்கப்பட்டது. இது டெல்லி, இந்திரபிரஸ்தத்தை தலைமை இடமாகக் கொண்டு செயல்படுகிறது. 29.03.1954ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. நாட்டின் அரசுத் துறை மற்றும் பொதுத் துறை நிறுவனங்களின் நிர்வாக மற்றும் திறன் மேம்பாட்டிற்கு பயிற்சி அளித்து நாட்டை சீரான பாதையில் கொண்டு செல்வதற்காக உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பாகும். மத்திய அரசுடன் நெருங்கிய தொடர்புடையது. இந்திய நாட்டின் துணை ஜனாதிபதி தான் இந்த அமைப்பின் தலைவராக செயல்படுவார். அதன்படி தற்போது மாண்புமிகு. வெங்கைய நாயுடு அவர்கள் தான் தலைமைப் பொறுப்பை வகித்து வருகிறார். இந்த அமைப்பில் ஆயுட்கால உறுப்பினராக மட்டுமே இணைய முடியும். அதற்கு ரூ. 7000/- மட்டுமே. இந்த அமைப்பிற்கு, நாடெங்கும் 43 கிளைகள் உள்ளன. அதில் இரண்டாவது பெரிய கிளை மதுரை தான். முதலாவது பெரிய கிளை புனே ஆகும்.



**K.K.G.Prabhakaran**
Vice Chairman, IIPA, MLB

## நினைவூட்டல்...

### இ-வே பில் கட்டாயம்

| மாநிலத்திற்குள் | வெளி மாநிலம் |
|---|---|
| ரூ. 100,000/- மேல் | ரூ. 50,000/- மேல் |

தவறினால் 200% வரை அபராதம்

### ஜி.எஸ்.டி. பதிவு

| சரக்கு மட்டும் எனில் | சரக்கு மற்றும் சேவை அல்லது சேவை மட்டும் எனில் |
|---|---|
| ஆண்டு வருமானம் ரூ. 40,00,000/- மேல் | ஆண்டு வருமானம் ரூ. 20,00,000/- மேல் |

உரிமையாளர் ஆதார் கட்டாயம்

### NOTIFICATION

As per the notification No. 01/2022 Dated: 24.02.2022, e-Invoicing is mandatory for the taxpayers with annual turnover more than Rs. 20 Crores from 1st April 2022. The taxpayers can check eligibility of e-Invoicing at Option Search - 'e-Invoicing Status of Taxpayers' of the e-Invoice portal.

Dr. S.S.Siva Prasath B.D.S., FGDS.



# Siva Dental Care

## TYPES OF DENTAL CARE

- Rct
- Orthodontics
- Dental Implants
- Dentures
- Dental Surgery
- Cosmetic Dentistry
- Oral Hygiene
- Periodontology

தினசரி காலை 10.00 to 2.00 மணி ★ மாலை 5.30 - 9.00 மணி

243-A, Kamarajar Salai, Near Alankar Theatre, Madurai - 625 009.
Contact : 86086 66642 E-mail : svprsth@gmail.com

# சமூக ஸமாச்சார்

**நடைபெற்று முடிந்த தமிழக உள்ளாட்சித் தேர்தலில், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்ளிலும், அந்தந்தப் பகுதியில் வாழும் ஸௌராஷ்ட்ர சமுதாய மக்கள் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரங்களை உங்கள் பார்வைக்கு...**

| | | |
|---|---|---|
| வாலாஜா பேட்டை | - திரு. என்.டி. சீனிவாசன் | - பா.ஜ.க. |
| | - திருமதி. லலிதா ஜெகதீசன் | - தி.மு.க. |
| | - திரு. டி.எல். ரமேஷ் | - அ.தி.மு.க |
| திருச்சி | - திரு. எல்.ஐ.சி. கே. சங்கர் | - சுயேச்சை |
| இலுப்பூர் | - திரு. த. சரவணன் | - சுயேச்சை |
| | - திரு. மு. லெட்சுமணன் | - சுயேச்சை |
| | - திரு. எ. செந்தில் ராஜா | - சுயேச்சை |
| | - திரு. லெ. கண்ணன் | - சுயேச்சை |
| திண்டுக்கல் | - திரு. கார்த்திக் | - காங்கிரஸ் |
| | - திருமதி. என்.ஏ. லட்சுமி | - தி.மு.க. |
| | - திருமதி. பா. நித்யா | - தி.மு.க. |
| | - திருமதி. ஜி. சுபாஷினி | - தி.மு.க. |
| சின்னாளப்பட்டி | - திரு. ராஜசேகர் | - தி.மு.க. |
| பரமக்குடி | - திருமதி. எம்.டி பானுமதி | - பா.ஜ.க. |
| | - திரு. எம்.கே. கண்ணன் | - அ.தி.மு.க. |
| எமனேஸ்வரம் | - திரு. ஜெய்சங்கர் | - அ.தி.மு.க. |
| | - திரு. குபேந்திரன் | - அ.தி.மு.க. |
| | - திரு. சீனிவாசன் | - அ.தி.மு.க. |
| ராசிபுரம் | - திருமதி. ஸ்ரீவித்யா | - தி.மு.க. |
| | - திருமதி. சசிரேகா | - சுயேச்சை |
| | - திருமதி. தேவிபிரியா | - தி.மு.க. |
| தஞ்சாவூர் | - திரு. யு.கே. கேசவன் | - அ.தி.மு.க |
| பரமத்தி | - திரு. ராஜேந்திரன் | - தி.மு.க. |
| சேலம் | - திருமதி. ஜெயஸ்ரீ | - தி.மு.க. |
| கும்பகோணம் | - திரு. அனந்தராமன் | - தி.மு.க. |
| | - திருமதி. தேவி | - தி.மு.க. |
| திருபுவனம் | - திரு. ராஜன் | - அ.தி.மு.க. |
| | - திருமதி. மல்லிகா | - தி.மு.க. |
| | - திரு. ரவிசங்கர் | - தி.மு.க. |
| | - திருமதி. அமுதவள்ளி | - தி.மு.க. |
| அறந்தாங்கி | - திருமதி. ராசு | - |
| பெரியகுளம் | - திரு. எல்.எம். வெங்கடேசன் | - அ.ம.மு.க. |
| திருநெல்வேலி | - திரு. ஜெ.எம். சந்திரசேகர் | - அ.தி.மு.க. |

தேர்தலில் மேற்காணும் வெற்றி பெற்ற வேட்பாளர்கள் அனைவருக்கும் தங்களின் சமூகப் பணி சிறக்க, பொது மக்களிடன் நற்பெயரைப் பெற...
எங்களது **ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்,** மதுரை சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

தகவல் உதவி
– வி.என். சாமி
மூத்த பத்திரிக்கையாளர்

## மருத்துவப் படிப்புக்காக தேசிய அளவில் நடைபெறும் நுழைவுத் தேர்வான நீட் தேர்வில் வெற்றி பெற்ற நம் ஸௌராஷ்ட்ர சமூக மாணவ மாணவிகளின் பெயர் மற்றும் அவர்களுக்கு இடம் கிடைத்துள்ள மருத்துவக்கல்லூரியின் பெயர் விபரங்கள்

| | |
|---|---|
| 1. **ஹயக்ரிவா** | - டெல்லி எய்ம்ஸ் கல்லூரி |
| 2. K.S. **ஹரிஹரன்** | - மெட்ராஸ் மெடிக்கல் காலேஜ் |
| 3. **ஏகநாதன்** | - தேனி மெடிக்கல் காலேஜ் |
| 4. K.K. **அசோக் பாபு** | - தூத்துக்குடி மெடிக்கல் காலேஜ் |
| 5. K.B. **அனிருத்** | - தஞ்சாவூர் மெடிக்கல் காலேஜ் |
| 6. S.S. **ஹரிஷ்பாபு** | - தேனி மெடிக்கல் காலேஜ் |
| 7. J.G. **மால்யா** | - தேனி மெடிக்கல் காலேஜ் |
| 8. B.R. **பிரியங்கா** | - மதுரை மெடிக்கல் காலேஜ் |
| 9. A.G. **தீபாஸ்ரீ** | - புதுக்கோட்டை மெடிக்கல் காலேஜ் |
| 10. A.K. **வினோதினி** | - விருதுநகர் மெடிக்கல் காலேஜ் |
| 11. R.T. **சனத்** | - கிருஷ்ணகிரி மெடிக்கல் காலேஜ் |

தகவல் உதவி
– கே. எல். விஸ்வநாதன்
–சேம்பர் ஆயுட்கால உறுப்பினர்



மருத்துவம் பயிலும் இந்த மாணவர்களை
எங்களது **ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்,** மதுரை சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

தங்கள் பகுதியில் நடக்கும் சமூக சுப நிகழ்வுகளை எங்களது சேம்பர் வாட்ஸ்ஆப் எண்ணிற்கு விபரங்களுடன் அனுப்பினால் நமது லாப் ஸமாச்சார் இதழின் சமூக ஸமாச்சார் பகுதியில் வெளியிடப்படும்.

**93441 97952**

# வேதவல்லி ஹாலிடேஸ்

VEDHAVALLI HOLIDAYS

Kamarajar Salai, Madurai

**Domestic & International Tour Planners | Car Rental | Flight Booking**



VEDHAVALLI HOLIDAYS

உள்நாடு மற்றும் வெளிநாடு

## விமான டிக்கெட்கள்

குறைந்த விலையில்

IndiGo | AIR INDIA | spiceJet | Emirates | Lufthansa

CALL : 99430 31237

VEDHAVALLI HOLIDAYS

நன்கு சுத்தப்படுத்தப்பட்ட கார்கள்

## PICK UP / DROP



from anywhere to anywhere across south india

BOOK NOW

99430 31237

www.vedhavalliholidays.com

## சுற்றுலா செல்ல

சிம்லா, மணாலி (7நாட்கள்)

கேங்டாக், டார்ஜிலிங் (6நாட்கள்)



அந்தான் (5நாட்கள்)


லே, லடாக் (7நாட்கள்)

VEDHAVALLI HOLIDAYS

Honeymoon Packages

## மாலத்தீவு





BOOK NOW

99430 31237

91599 18447

www.vedhavalliholidays.com

www.vedhavalliholidays.com

BOOK NOW

**99430 31237**

Domestic & International Tour Planners | Car Rental | Flight Booking

VEDHAVALLI HOLIDAYS

வேதவல்லி ஹாலிடேஸ்

Kamarajar Salai, Madurai

# A Special Meet on ADVANCE TAX



திரு. K.R. சதீஷ் குமார்

Advance Tax செலுத்துவதற்கு 15 மார்ச் கடைசி நாள் என்பதைக் கருத்தில்கொண்டும், Advance Tax செலுத்துவதால் கிடைக்கக்கூடிய நன்மைகள் மற்றும் வரி செலுத்துவதை ஊக்குவிப்பதற்காகவும், இந்த மார்ச் மாதத்தில், இரண்டாவது முறையாக தொழில் வர்த்தகக் கூட்டம் நமது சேம்பர் அரங்கில் 11.03.2022 அன்று நடைபெற்றது.

இது குறித்துப் பேச சிறப்பு விருந்தினராக வருமான வரித்துறையின் இணை ஆணையர் திரு. **K.R. சதீஷ் குமார்** அவர்கள் கலந்து கொண்டார். உடன், வருமான வரி அலுவலர்கள் திரு. **S.B. சூரிய பிரகாஷ்**, திரு. **R. ஆண்டி**, திரு. **D. லட்சுமணன்** மற்றும் திரு. **V. ஆனந்த குமார்** ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சிக்கு சேம்பர் தலைவர் திரு. **குமரன் B. ஜகுவா** அவர்கள் தலைமைத் தாங்கினார். நிகழ்ச்சிக்குழு சேர்மன் திரு. **T.R. சரவணன்** அவர்கள் ஏற்பாடு செய்தார். இந்த நிகழ்ச்சி ஏற்பாட்டிற்கு உதவிய சேம்பர் பட்டயக்கணக்காளர் **CA. M.T. ஹரிஹரன்** அவர்களை நமது சேம்பர் நன்றி தெரிவித்துகொள்கிறது. சேம்பர் இணைச் செயலாளர் திரு. **J.S. சாயீஜீவன்** அவர்கள் நன்றி தெரிவித்தார்.

கூட்டத்திற்கு வருகை தந்த அனைவருக்கும் அறுசுவை இரவு உணவு விருந்தை ஏற்பாடு செய்த சேம்பர் இணைச் செயலாளர் திரு. **J.S. சாயிஜீவன்** மற்றும் சிறப்பு அழைப்பாளர் திரு. **B.V. குப்புராஜ்** அவர்களுக்கு சேம்பர் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.






திரு. V. ஆனந்த குமார்　　திரு. S.B. சூரிய பிரகாஷ்




இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்கள் பேசிய விரிவான தகவல்களை அடுத்த மாத இதழில் காண்போம்...

Exclusive Showroom for U'r Branded Products

IDEAL innerwear · ANAND · Viking · Prithvi INNER WEARS · NAIDU HALL THE FAMILY STORE · JOCKEY INNER WEAR · Poomex · MANGAI NIGHTIES · RASATHE DARLING NIGHTIES · YOKE'S NIGHTY

& All Branded Innerwears for All

Online Purchase for any Items Call 98941 41402 payments by G Pay PhonePe
Save Your Valuable Time, Money & Healthy Life.

B THE BABY SHOP அலங்கார் தி பேபி ஷாப்

உள்ளாடைகள் உலகம்
280, காமராஜர் சாலை, விளக்குத்தூண்,
மதுரை - 625 009. அலைபேசி : 98941 41402
HP பெட்ரோல் பங்க் எதிர்புறம், SR காம்ப்ளக்ஸ் பில்டிங்,
மீனாட்சி நகர், வில்லாபுரம்,
மதுரை – 625 012. செல் : 98941 41402

# தொழில் வளர்ச்சிக்கு அரசு வழங்கும் 5 டாப் லோன்கள்

நாட்டின் பொருளாதார நிலையில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்காக மத்திய அரசு பல்வேறு வகையான திட்டங்களையும் கொள்கைகளையும் வகுத்துள்ளது. பல்வேறு தொழில்களை ஊக்குவிப்பதற்காக தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்துவதற்காகவும் நிதிசார்ந்த உதவிகளை மத்திய அரசு செய்ய முன்வந்துள்ளது. எந்தவொரு தொழிலுக்கும் நிதி என்பது அடிப்படையானதாகும். அது சிறு தொழிலாகவும் இருக்கலாம் அல்லது பெரு நிறுவனங்களாகவும் இருக்கலாம்.

**2022ம் ஆண்டில் டாப் 5 அரசு லோன்கள்:**

**1. எம்.எஸ்.எம்.இ. லோன்:** செயல்பாட்டு மூலதன லோனை மையமாகக் கொண்டு மத்திய அரசாங்கத்தால் இந்த லோன் அறிமுகப்படுத்தப்பட்டது. ரூ. 1 கோடி நிதியுதவியுடன் புதிய மற்றும் ஏற்கனவே உள்ள வணிகங்கள் இந்த திட்டத்தை தேர்வு செய்யலாம். விண்ணப்பம் பெறப்பட்ட 59 நிமிடங்களுக்குள் ஒப்புதல் செய்யப்படுகிறது.

இந்த லோனுக்கான வட்டி விகிதம் 8 சதவீதம்,

மகளிர் தொழில்முனைவோர் இட ஒதுக்கீடு 3 சதவீதம்,

கடன் செயலாக்க நேரம் 8 முதல் 12 நாட்கள்.

**2. கடன் உத்தராவத நிதி திட்டம்:** இந்தத் திட்டம் சிறு மற்றும் குறு நிறுவனங்களுக்கு பிணையம் எதுவும் கேட்காமல் லோனை வழங்குகிறது.

செயல்பாட்டு மூலதனக் கடன்கள்: ரூ. 10 லட்சம் பிணையம் இல்லாமல் லோன்கள் வழங்கப்படுகிறது.

பிணையம்: நிலம் மற்றும் கட்டிடங்கள் போன்ற சொத்துக்களின் முதன்மை பிணையம் மற்றும் அடமானம்.

**3. முத்ரா லோன்:** சிறு வணிகங்கள் மற்றும் தொடக்க நிறுவனங்களுக்கு குறைந்த வட்டியில் லோன் தருவதற்கான முன்முயற்சியை முத்ரா எடுத்துள்ளது. உற்பத்தி, வர்த்தகம் மற்றும் சேவைத் துறையில் செயல்படும் சிறு மற்றும் குறு வணிக நிறுவனங்களுக்கு வழங்குகிறது. பொது மற்றும் தனியார் துறை வங்கிகள், கூட்டுறவு சங்கங்கள், சிறு வங்கிகள், திட்டமிடப்பட்ட வணிக வங்கிகள் மற்றும் கிராமப்புற வங்கிகள் மூலம் கடன் பதிவு செய்யப்படுகிறது. முத்ரா கடன் மூன்று பிரிவுகளின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்படுகிறது.

சிஷு கடன்கள்: ரூ. 50,000,

கிஷோர் கடன்கள்: ரூ. 5,00,000

தருண் கடன்கள்: ரூ. 10,00,000.

**4. கடன் இணைப்பு மூலதன மானியத் திட்டம்:** இந்தக் கடனில் உங்கள் வணிகத்திற்கான தொழில்நுட்ப மேம்பாடுகளுக்கான நிதியும் அடங்கும். அடிப்படையில், உற்பத்தி, சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகச் சங்கிலி போன்ற பல்வேறு செயல்முறைகளை மறுசீரமைக்கப் பயன்படுகிறது. SME-களை உருவாக்குவதற்கும் பொருட்களை வழங்குவதற்கும் உற்பத்திச் செலவும் குறைக்கப்படுகிறது.

இந்தத் திட்டம் தகுதியான வணிகங்களுக்கு சுமார் 15 சதவீம் மூலதன மானியத்தை வழங்குகிறது.

கடன் வரம்பு: ரூ. 15 லட்சம். தகுதி: உரிமையாளர் வணிகம், கூட்டாண்மை நிறுவனம், கூட்டுறவு அல்லது தனியார் மற்றும் பொது வரையறுக்கப்பட்ட நிறுவனமாக இருக்க வேண்டும்.

**5. தேசிய சிறுதொழில் கழக மானியம்:** இந்த மானியம், மூலப்பொருள் உதவித் திட்டத்தைத் தேர்ந்தெடுப்பதாகும். அங்கு வணிகத்திற்குத் தேவையான உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் விலைக்கு வணிகம் நிதியளிக்க முடியும். சந்தைப்படுத்தல் உத்தியுடன், வணிக சலுகைகளுக்கான போட்டி சந்தை மதிப்பை உருவாக்க நிதியைப் பயன்படுத்தலாம். இது உற்பத்தி மற்றும் தரத்தை மேம்படுத்த எம்.எஸ்.எம்.இ-ன் செயல்பாட்டிற்கு உதவுகிறது. எம்.எஸ்.எம்.இ-களுக்கு இரண்டு விதமான நிதியுதவிகளை என்.எஸ்.ஐ.சி வழங்குகிறது. அவை மூலப்பொருள் உதவி மற்றும் சந்தைப்படுத்தல் உதவியாகும்.

– தி இந்தியன் எக்ஸ்பரஸ் (த)





# ரோபோட்டிக் சிகிச்சையில்

## நம் சமூக மருத்துவர்...

சமீபத்தில் மதுரையில் வசிக்கும் நம் சமூகத்தைச் சேர்ந்த மருத்துவர் ரோபோட்டிக் மூலமாக அறுவை சிகிச்சை செய்து சாதனை படைத்துள்ளார். அவரது சாதனையை பாராட்டி பல்வேறு நாளிதழ்களிலும் வெளியானது அனைவரும் அறிந்திருக்கலாம்.



மதுரை, பேலஸ் ரோடு பகுதியில் **யுவன் யூராலஜி கிளினிக்**-ஐ நடத்தி வரும் மருத்துவர் **ஆர்.எம். சதீஷ் குமார்** அவர்கள் தான் இந்த சாதனைக்குச் சொந்தக்காரர். இவர் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் அங்கத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. M.S., M.Ch., பட்டம் பெற்றவர். யூராலஜி மருத்துவத் துறையில் பத்தாண்டுகாலம் அனுபவம் உள்ளவர்.

இவரது சாதனையைப் பற்றி விளக்கமாக அனைவரும் அறிந்துகொள்வதற்காக நமது சேம்பர்-ன் லாப் ஸமாச்சார் இதழ்குழுவினர் நேரில் சந்தித்து நேர்காணல் செய்தனர்.

மருத்துவர் **ஆர்.எம். சதீஷ் குமார்** அவர்கள் கூறுகையில், அமெரிக்கா, மும்பை, சென்னை போன்ற நாடுகளில், நகரங்களில் உள்ள நவீன மருத்துவ சிகிச்சை முறைகளை மதுரையில் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கில் தாமும், தம் மருத்துவ நண்பர்கள் குழுவினரும் இணைந்து இந்த புதிய முயற்சியில் இறங்கியதாகத் தெரிவித்தார்.

வெளிமாநிலத்தில் மருத்துவப்படிப்பை முடித்து எத்தனையோ வெளிநாட்டு வாய்ப்புகள் தன்னைத் தேடிவந்தவைகளை எல்லாம் புறம் தள்ளி, பிறந்த மண்ணில் தான் சேவை செய்ய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு, உலகில் கிடைக்கும் நவீன மருத்துவ வசதியை நம் மதுரை மக்களுக்காக கிடைக்கச் செய்வதில் இவருக்கு நிகர் இவரே.

இவரது மனைவி, **அர்ச்சனா லஷ்மி** மற்றும் ஒரு மகள், **பிரன்யா சதார்ச்** ஆவர்.

ரோபோட்டிக் முறையில் செய்யப்படும் சிகிச்சை, முதலில் மூன்று வருடங்களுக்கு முன்னர் மதுரையில் இயங்கி வரும் ஒரு பிரபல மருத்துவமனையில் செய்யப்பட்டாலும், அதில் ஒரு முழுமையின்மை இருந்தது. அக்குறையை, சவாலாக எடுத்து, நமது மருத்துவமனையில்





வெற்றிகரமாக செய்துள்ளோம் என்பதில் பெருமைகொள்கிறோம் எனத் தெரிவித்தார்.

இந்தியாவில், இந்த ரோபோட்டிக் சிகிச்சை உருவாக்கப்பட்டு 20 வருடங்கள் ஆகின்றன என்றாலும், அவை பெரும்பாலும் முதல் Version ஆகும். தற்போது நாங்கள் செய்து வருவது இரண்டாவது Version என்றார்.

இந்த ரோபோட்டிக் அறுவை சிகிச்சை அனைவருக்கும் செய்யப்படுவது கிடையாது. குறிப்பிட்ட தேவைப்படும் சிகிச்சைகளுக்கு மட்டுமே இந்த முறையில் அறுவை சிகிச்சை செய்ய உதவும்.

லாப்ராஸ்கோபிக் முறையில் செய்யப்படும் சிகிச்சையின் அடுத்தகட்ட நிலை தான் இந்த ரோபோட்டிக் முறையிலான சிகிச்சை. லாப்ராஸ்கோபிக் முறையில் அறுவை சிகிச்சை மிகத் துல்லியமாக செய்யப்படும். எனிலும் அதில் உள்ள சில குறைபாடுகளை களைந்து அடுத்த நிலைக்கு மேலும் நேர்த்தியுடன், மனித கைகள் மடக்கி இயங்குவது போல செய்யப்படும் முறையே இந்த ரோபோட்டிக் அறுவை சிகிச்சை என்று தெரிவித்தார்.

பொதுவாக ராணுவத்திற்காக உருவாக்கப்படும் எந்த ஒரு புதிய தொழில்நுட்பம், கண்டுபிடிப்புகள் போன்றவை மக்களுக்கும் பயன்படக்கூடியதாக இருக்கும் பட்சத்தில், அவை பொதுமக்கள் சந்தைக்கு வந்து விடுகிறது. உதாரணத்திற்கு செல்போன் போன்றவை. அந்த வகையில் தான் இந்த ரோபோட்டிக் மருத்துவ சிகிச்சை முறையும் உருவானது.

மருத்துவர் ஒருபுறம் இருந்து கொண்டு வேறொருபுறம் நோயாளியை இருந்த இடத்திலேயே அறுவை சிகிச்சை பெறக்கூடிய வகையில் இன்று மருத்துவத் தொழில்நுட்பம் வளர்ந்து வரக்கூடியதாக இருக்கிறது. தற்போது ரோபோட்டிக் மூலமாக செய்யப்பட்ட இந்த அறுவை சிகிச்சை, ஆர்டிபிசியல் இன்டலிஜன்ஸ், ஆக்மன் ரியாலிட்டி என்று கூறிவிட முடியாது என்று கூறினார்.

எந்த நோய்களுக்கு லாப்ராஸ்கோபிக் சிசிக்கை பயன்படுமோ, அங்கெல்லாம் இந்த ரோபோட்டிக் முறையும் பயன்படுகிறது. அறுவை சிகிச்சை நேரமும் குறைகிறது. லாப்ராஸ்கோபி அறுவை சிகிச்சைக்



கட்டணத்தை விட சற்றே கூடுதல் கட்டணம் தான் ஆகும்.

இந்த சிகிச்சையில் தவறுகள் நடப்பதற்கு மிக மிகக் குறைவு எனக் கூறியவர், இதழ் குழுவினருக்காக ஒருமுறை செயல்முறை விளக்கமளித்தார்.

அதோடு, நோயாளிகளின் நோய்த் தன்மை அறிந்து அதற்கு உகந்த முறையில் தாம் செய்து வரும் சிகிச்சை முறைகளைப் பற்றி அழகாக விவரித்தார். மேலும் பல்வேறு அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டார்.

மருத்துவம் படித்து மேலைநாடுகளின் தொழில் நுட்பத்திறன்களை அறிந்து கொண்டு தாம் தம்மைச் சுற்றி இருக்கும் மக்களுக்கு இது பயன்பட வேண்டும் என்ற நோக்கில் மதுரையில் மருத்துவமனையைத் துவக்கி தம் மருத்துவச் சேவையைச் செய்து வரும் யூராலஜி மருத்துவர் திரு. **சதீஷ் குமார்** அவர்களின் பணி மென்மேலும் சிறக்க வேண்டும் என்று நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் இதழ் குழு சார்பாக வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறது.

– இதழ் குழு

## வாழ்த்துகள்



Association of Preowned Medical Equipments Suppliers India (APMEI) எனும் தேசிய அமைப்பின் தலைவராக, கோழிக்கோட்டில் வசிக்கும் நமது சேம்பர் போஷக அங்கத்தினர் திரு. K.R.M. நிரஞ்சன் குமார் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவருக்கு நமது சேம்பர் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.



Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

Safety! Security!! Surveillance!!!

A TO Z
CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom

Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633


https://youtu.be/-JMVniVMLr0



# தகுதியுடைய ஸ்டார்ட் அப் என்றால் என்ன?

தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்காக 2016ம் ஆண்டில் ஸ்டார்ட் அப் இந்தியா (Startup India) திட்டம் பிரதமர் நரேந்திர மோடியால் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு வங்கிகள் மூலம் நிதியுதவி வழங்குவது, ஸ்டார்ட் அப் தொடங்குவதை எளிமையாக்குவது, வரி சலுகைகள் வழங்குவது உள்ளிட்டவை இத்திட்டத்தின் நோக்கங்களாகும். எனினும் தகுதியுடயை ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு மட்டுமே மேற்கூறிய சலுகைகளும், பயன்களும் கிடைக்கும்.

**தகுதியுடைய ஸ்டார்ட் அப் என்றால் என்ன?**

- நிறுவனம் பதிவு செய்யப்பட்டு 10 ஆண்டுகளை தாண்டியிருக்கக் கூடாது.
- தனியார் லிமிடெட் நிறுவனமாகவோ, பார்ட்னர்ஷிப் நிறுவனமாகவோ பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- ஆண்டுக்கு 100 கோடி ரூபாய்க்கு மிகாமல் விற்றுமுதல் (Turnover) இருக்க வேண்டும்.
- புதுமை, வளர்ச்சி, தயாரிப்புகளை மேம்படுத்துதல், சேவைகள் போன்றவற்றில் ஈடுபட்டிருக்க வேண்டும். அல்லது, அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.
- ஏற்கனவே உள்ள நிறுவனத்தில் இருந்து பிரிந்து நிறுவனமாகவோ, ஏற்கனவே உள்ள நிறுவனம் மறுசீரமைக்கப்பட்டதாகவோ இருக்கக் கூடாது.

**வரி சலுகைகள்:** மேற்கூறியபடி தகுதியுடைய ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு மூன்று ஆண்டுகள் வரை 100% முழு வரி விலக்கு வழங்கப்படுகிறது. இது போன்ற நிறுவனங்களுக்கு நீண்டகால கேபிடல் கெயின்ஸ் வரியில் இருந்து விலக்கு அளிக்க வருமான வரிச் சட்டத்தில் 54EE என்ற புதிய பிரிவும் சேர்க்கப்பட்டுள்ளது.

– தி டைம்ஸ் ஆப் இந்தியா(த)

# ஆதார் எங்கெல்லாம் பயன்படுத்தி இருக்கிறீர்கள்?

## ஆதார் ஆணையத்தின் சமீபத்திய புதிய அறிவிப்பு

உங்களின் ஆதார் விவரங்கள் நீங்கள் எங்கெங்கு பகிர்ந்து கொண்டீர்கள் என்ற தகவல்களை நீங்களே வீட்டிலிருந்தபடியே பார்க்கலாம். ஆதார் அங்கீகார வரலாற்றை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்றால், கவலைப்படத் தேவையில்லை! கடந்த ஆறு மாதங்களில் ஒருவர் 50 அங்கீகாரங்கள் வரை ஆதார் அங்கீகாரத்தை சரிபார்க்க முடியும். அங்கீகாரத்தின் சரியான தேதி மற்றும் நேரத்துடன் குறிப்பிடப்படும். இது திட்டமிடப்படாத அங்கீகார உள்ளீடு உள்ளதா என்பதைக் கவனிக்க உதவும் என்று ஆதார் ஆணையம் சமீபத்தில் ட்வீட் செய்தது.

UIDAI இணையதளத்தில் ஆதார் அங்கீகார வரலாறு சேவையானது, கடந்த காலத்தில் தனிநபர் செய்த அங்கீகாரத்தின் விவரங்களை வழங்குகிறது. ஆதார் அங்கீகார வரலாற்றைச் சரிபார்க்க, UIDAI இணையதளத்தில் உள்நுழைய வேண்டும். இப்போது, நீங்கள் உங்களின் ஆதார் எண் / VID ஐப் பயன்படுத்தி, இணையதளத்தில் உள்ள வழிமுறைகளைப் பின்பற்றி, UIDAI இணையதளங்களில் இருந்து உங்களின் ஆதார் அங்கீகார வரலாற்றைச் சரிபார்க்கலாம்.

இந்த சேவைக்கு பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதில் நீங்கள் செய்த ஒவ்வொரு அங்கீகாரத்திற்கும் எதிராக ஆதார் அங்கீகார வரலாற்றில் பின்வரும் தகவலை பெறலாம்.

1. அங்கீகார முறை,
2. அங்கீகாரத்தின் தேதி மற்றும் நேரம்,
3. UIDAI பதில் குறியீடு,
4. AUA பெயர்,
5. AUA பரிவர்த்தனை ஐடி (குறியீட்டுடன்),
6. அங்கீகார பதில் (வெற்றி/தோல்வி) &
7. UIDAI பிழைக் குறியீடு.

ஆதார் எண் வைத்திருப்பவர், கடந்த ஆறு மாதங்களில் ஏதேனும் அங்கீகாரப் பயனர் ஏஜென்சி (AUA) அல்லது அவரால் செய்யப்பட்ட அனைத்து அங்கீகாரப் பதிவுகளின் விவரங்களையும் பார்க்க முடியும். இருப்பினும், ஒரு நேரத்தில் அதிகபட்சம் 50 பதிவுகளை மட்டுமே பார்க்க முடியும். இது தொடர்பாக கூடுதல் விவரங்களுக்கு, UIDAI இன் அதிகாரப்பூர்வ இணையதள பக்கத்தினைப் பார்வையிடுங்கள்.

– தி இந்தியன் எக்ஸ்பிரஸ்(த)



## இந்தியாவில் கட்டப்பட்டு வரும்
# உலகின் உயரமான ரயில்வே பாலம்

சுதந்திரத்திற்குப் பிறகு, இந்தியாவில் பல மாநிலங்கள், அதிலும் குறிப்பாக வடகிழக்கு மாநிலங்கள் வளர்ச்சிப் பயணத்தில் பின்தங்கி இருந்தன. இந்தப் பிராந்தியத்தின் கடினமான மலைப்பகுதி நிலப்பரப்பு மற்றும் இதர இட அமைப்பியல் சூழல் ஆகிய தடைகளைத் தாண்டி இந்த மாநிலங்களை பெரும்போக்கு வளர்ச்சிப் பாதையில் இணைக்க வலுவான உள்கட்டமைப்பு வசதி தேவைப்படுகிறது.

தற்போது நமது மத்திய அரசு உள்கட்டமைப்பு வசதிகளுக்கு அதிக முக்கியத்துவத்தை அளித்து வருகிறது.

மணிப்பூரில் உலகின் உயரமான பாலத்தூண்களைக் கட்டுவது என்பது இந்தியாவின் வடகிழக்கில் உள்கட்டமைப்பை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற அரசின் பொறுப்புடைமையின் மற்றொரு வெளிப்பாடாகும். இந்த லட்சியத் திட்டமானது 111 கி.மீ., தூரமுள்ள ஜிரிபாம் டு இம்பால் ரயில்வே பாதையின் ஒரு பகுதி ஆகும். இது மாநிலத் தலைநகரான இம்பாலை நாட்டின் அகல ரயில்பாதை நெட்வொர்க்கோடு இணைக்கும்.

இந்தப் பாலமானது ரிக்டர் அளவுகோளில் 8.5 அளவுவரையிலான நிலநடுக்கத்தின் அதிர்வுகளை தாங்கி நிற்கும் வகையில் கட்டப்படுகிறது.

இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, 111 கி.மீ., தூரத்தை 2.5 மணி நேரத்தில் பயணித்து விடலாம். தற்போது, ஜிரிபாம் டு இம்பால் இடையிலான (என்.ஹெச். 37) தூரம் 220 கி.மீ., ஆகும். இதைக் கடக்க 10-12 மணி நேரம் ஆகிறது. பாலம் கட்டி முடிக்கப்பட்ட பிறகு, நோனி பள்ளத்தாக்கை கடக்கும் பாலம் உலகின் மிக உயரமான பாலத்தூணாக அமையும். இந்தப் பாலத்தைக் கட்டும் பணியானது டிசம்பர் 2023ல் முடிவடையும்.

### நினைவூட்டல்...

- கொரோனா ஊரடங்கு தளர்வுகள் இருந்தாலும் மாஸ்க் அணிவதை மறவாதீர்கள்
- உங்கள் அலுவலகம் மற்றும் வீட்டை சுத்தமாக வைத்திருக்கத் தவறாதீர்கள்
- சானிடைசர்-ஐ அவசியம் பயன்படுத்துங்கள்
- கூட்ட நெரிசல்களில் செல்வதை தவிர்க்கவும்

# உலக தாய் மொழி தனம்

## பிப்ரவரி-21

### உறுதிகொள்வோம் தாய்மொழியைக் காத்திட...

கேட்பதற்கு இனிமையாக இருக்கும் என்று பலராலும் கூறப்படுவது நம் **'ஸௌராஷ்ட்ர மொழியைத் தான்'.**

கடந்த பத்தாம் நூற்றாண்டில், இந்தியாவின் குஜராத் பகுதியிலிருந்து வெளியேறி பல்வேறு பகுதிகளைக் கடந்து இன்று தமிழகத்தில் கடந்த நானூறு ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்து வருகிறோம். ஆயிரம் ஆண்டு கால பயணம், சொந்த மண்ணை விட்டு வெளியேறினாலும், இன்றும் கலாச்சாரம், மொழி ஆகியவற்றை தொடர்ந்து பின்பற்றி அதனை காத்து வருகிறோம் என்கிறபோது சற்று கர்வத்துடன் பெருமை கொள்ளத் தோன்றுகிறது.

கடந்த 2009ம் ஆண்டு, அப்போதைய குஜராத் முதல்வராக இருந்து பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள், தாய்மண்ணிலிருந்து பிரிந்து சென்று தென்னகத்தில் வாழும் தொப்புள்கொடு உறவுகளைக் காண வேண்டும் என்ற நோக்கத்துடன் மதுரை வந்து நம் இன மக்களை கண்டு பேசினார். அப்போது அவரே ஆச்சரியத்துடன் பேசியது; இன்றும் மொழியையும், கலாச்சாரத்தையும் விடாமல் காத்து வருவதை புகழ்ந்து, பாராட்டிப் பேசினார்.

அதோடு, புகழ்பெற்ற எழுத்தாளர் திரு. லேனா தமிழ்வாணன் போன்ற எழுத்தாளர்கள் மற்றும் சிறந்த பேச்சாளர்கள் பலர், பத்திரிக்கைகளில், மேடைகளில் ஸௌராஷ்ட்ர இன மக்கள் தங்கள் மொழியை இன்றும் முழுமையாக பேசுவதை சுட்டிக்காட்டியுள்ளது பெருமையே.

ஒரு மொழி அழியாமல் இருக்க, அதைத் தொடர்ந்து எந்த சூழலிலும், தம் இனத்தாருடன் தாய்மொழியிலேயே பேச வேண்டும். இதுவே நம் சமூகத்திற்கு பெருமை தேடித் தந்துள்ளது. அதே மொழியை உலகறியச் செய்ய, அடுத்து நிலைக்கு / தரம் உயர்த்திட, இன்றைய தொழில்நுட்பத்தை எதிர்கொள்ள, மொழி ஆராய்ச்சி செய்து, நவீன சொற்களை உருவாக்கி, அதில் செம்மையடைய வேண்டும்.

இன்று நமது சமூகத்தில் உள்ள எழுத்து மற்றும் மொழில் ஆர்வலர்கள் பலர் தற்போதைய நவீன தொழில்நுட்பத்தில் நம் மொழி எழுத்தை இன்றைய இளைய தலைமுறையினர் அலைபேசியிலும், இணையத்திலும் உள்ளீடு செய்யும் வகையில் வடிவமைத்துள்ளனர். அது மட்டுமல்லாமல், வெளிநாடு வாழ் நம் சமூகக் குழந்தைகள் நம் மொழியை எளிதாக கற்றுக்கொள்ள அனைத்து தளத்திலும் இயங்கும் செயலி (I Phone, Android, Windows, Mac Sys) App Trust ஒன்று விரைவில் அறிமுகம் செய்ய உள்ளது என்பதை இத்தருணத்தில் மகிழ்ச்சியடைச் செய்துள்ளது.

நம் மொழியை நம் சமூக மக்கள் அனைவருக்கும் சென்றடைய இன்றைய நம் சமூக இளைஞர்கள் பலரும் முனைப்புடன் செயல்பட்டு வருவது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. மொழி வளர்ச்சியில் ஈடுபடும் அனைவரையும் தாய் மொழி தினத்தில் வாழ்த்தி வணங்குவோம். – இதழ்குழு



## உலகம் வியக்கும் கிராண்டாஸ்டர்

# பிரக்ஞானந்தா

